## மார்ச் – 13 –புதன்

### “குற்றம் செய்தோர்க்கு உம் வழிகளைக் கற்பிப்பேன்” – திபா 51:13

**முதல் வாசகம்: யோனா : 3 : 1 – 0**

இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர்,”நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியைஅங்குள்ளோருக்கு அறிவி” என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக்கடக்க மூன்றுநாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்தபின், உரத்த குரலில், ”இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்” என்று அறிவித்தார்.நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர்.இந்தச் செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்காரந்தான்.மேலும் அவன் ஓர் ஆணை பிறப்பித்து அதை நினிவே முழுதும் பறைசாற்றச் செய்தான். இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக் கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது.மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாடவேண்டும் தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும்.இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார் அவரது கடுஞ்சினமும் தணியும் நமக்கு அழிவு வராது.”கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார் தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை.

**பதில்பாடல்:** நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பதில்லை.

**நற்செய்தி : லூக்கா 11 : 29 - 32**

அக்காலத்தில், மக்கள் வந்து கூடக்கூட இயேசு கூறியது ”இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத்தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிட மகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்புநாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!” என்றார்.

**தியானம்:** நினிவே நகர மக்களது நல்ல செயலுக்காக ஆண்டவர் இயேசு அவர்களைப் பாராட்டுவதுடன் தமது காலத்தில் வாழ்ந்த மக்களது கீழ்ப்படியாச் செயலுக்காக அவர்களைக் கண்டனம் செய்கின்றார் (லூக்கா 11:29-32). அப்படியாயின் சுனாமிப் பேரழிவு மற்றும் இறுதி யுத்தக்கொடூரம் என்பவற்றைவிட இவ்வுலகின் இறுதிக்காலம் தொடர்பாக வேறு அடையாளங்கள் தரப்படவேண்டுமா? எனவும் நாம் வேறுவிதமாக இத்தவக்காலத்தில் தியானிக்க நற்செய்தி எம்மை வினாவுகின்றது. நினிவே மக்கள் யோனாவின் செய்தியைக் கேட்டதும் மனம்மாறி தங்களது வாழ்க்கை முறையை மாற்றியமைத்து, மனதுருகி இறைவேண்டுதல் செய்ததனால் வரவிருந்த பேரழிவிலிருந்து தப்பித்துக்கொண்டதாக நற்செய்தி கூறுகின்றது. ஆயினும் ஆண்டவர் இயேசுவின் காலத்து மக்கள் அவரது போதனையைக் கேட்க மறுத்தனர். ஆண்டவர் இயேசுவைக் குறைகூறி கண்டனம் செய்து புறக்கணித்தனர். சிலுவையில் அறைந்து கொலையும் செய்தனர். எனினும் இறைவனது இரக்கத்தைப் பெற நாங்கள் செய்வதென்ன? நமது தாயகத்தில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவு மற்றும் இறுதி யுத்தக் கொடூரம் என்பவற்றைக் கண்ணால் கண்டு வாழ்ந்து அனுபவித்தது மட்டுமல்ல -காதால் கேட்டும் எமது ஆணவமும் - அதிகாரமும் - வரட்டுக்கௌரவமும் ஏன் இன்னமும் அடங்கவில்லை? அதற்காகவே அன்னையாம் திருச்சபை இத்தவக்காலத்தில் எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளாள். இவ்வரிய சந்தர்ப்பத்தை நாம் நழுவவிடாது பாவப்பொறுத்தல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்வோம். அலட்சியம் செய்யாது உடனே செயல்படுவோம். அப்போது நினிவே நகரமக்களோடு நாமும் பேறுபெற்றவவர்கள் பட்டியலில் எமது பெயரையும் இணைத்துக் கொள்ளமுடியும். எனவே ஆண்டவர் இயேசு அறிவிக்கின்ற செய்திக்கு எமது காதுகளை மட்டுமல்ல உள்ளத்தையும் திறந்து கொடுப்போம். நற்செய்தி தருகின்ற செய்தியை எமது உள்ளத்தில் விசுவாசத்தோடு இருத்துவோம். ஏனெனில் பல அரும்பெரும் அடையாளங்களை ஆண்டவர் இயேசு எமக்கும் காட்டுவதற்கு வல்லவராக இருக்கின்றாரென நம்பி விசுவசித்து அந்த அடையாளங்களின் வழியாகப் பாய்ந்தோடி வரும் இறைவனது இரக்கத்தை இத்தவக்காலத்தோடு பற்றிப் பிடித்துக்கொண்டு உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழக் கற்றுக்கொள்வோம். ஏனெனில் அன்று யோனாவை விழுங்கிய மீன் மூன்று நாட்களின் பின்னர் அவரை விடுதலை செய்தது - ஆயினும் இறுதி நாளில் எம்மை விழுங்க வரும் சாத்தானோ நித்திய நரகத்திற்கே எம்மை இழுத்துச் செல்வான்.